# சமூக நீதியின் சகுனி பா.ஜ.க.

பேரா.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்
கழக செய்தித் தொடர்பு செயலாளர்



"When Fascism comes to America, it will be wrapped in the National Flag

and carrying the Holy cross" James Waterman.

"அமெரிக்க தேசத்தை உருக்குலைக்க வருகிற பாசிசம்,

அமெரிக்க தேசியக் கொடியைப் போர்த்திக் கொண்டு, மத அடையாள சிலுவையைத் தூக்கிக் கொண்டுதான் வரும்"

என்ற ஜேம்ஸ் வாட்டர்மேன் கருத்திற்கிணங்க, பா.ஜ.க.வின் அடுத்தக் குறி, சமூக நீதிதான் என்பதை பிரகடனப்படுத்தும் வண்ணம் இந்தியாவில் சமீபத்தில் நடந்து முடிந்த ஐந்து மாநில தேர்தல்களில் பா.ஜ.க. வெற்றி பெற்ற மூன்று மாநில முதல்வர்களின் தேர்வு நடந்தேறி இருக்கிறது. அதில் பா.ஜ.க. ஏதோ சமூக நீதியைப் பின்பற்றுவது போன்ற பித்தலாட்ட பிம்பத்தை உருவாக்க முனைந்திருக்கிறது.

ஏனெனில், பிறப்பால் உயர்வு, தாழ்வு உண்டு என்றும் பிறந்த குலத்திற்கேற்பதான் ஒருவனுக்கு சமூகத்தில் அந்தஸ்தும் மரியாதையும் உரிமையும் கொடுக்கப்படும் என்ற சனாதனக் கொள்கையை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தது. தேர்தலுக்கு முன்னால் பா.ஜ.க. ஆண்ட 17 மாநிலங்களில் ஒரே ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த முதல்வரைத் தவிர மற்ற அனைவரும் உயர் வகுப்பினராக கொண்டு ஆட்சி நடத்தி. தனது சனாதன கொள்கையில் தீவிரப் பற்றுதலை காட்டிக் கொண்டிருந்தது.

பா.ஜ.க.வின் இந்த அரசியல் நிலைப்பாடு சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட திராவிட, திராவிட இயக்க கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இருந்த ஆண்டான் அடிமை சமூகத்தின் எச்சம் என்று திராவிட இயக்கத் தலைவர்கள் சுட்டிக்காட்டிய போதும், இந்திய பாராளுமன்றத்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி 20.09.2023 அன்று பாராளுமன்றத்தில் உள்ள 90 செயலாளர்களில் மூன்று பேர் மட்டுமே OBC வகுப்பை சேர்ந்தவர்கள். மற்றவர்கள் 87 பேரும் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது போன்ற தரவுகளை எடுத்து வைத்து வாதிட்ட போதும் கண்டு கொள்ளாமல் இருந்த பா.ஜ.க., தற்போது தனது கொள்கையில் அந்தர் பல்டி அடித்து மாநில முதல்வர்களின் தேர்வில் தன்நிலையை அடியோடு மாற்றிக் கொண்டு சமூகநீதியை ஏற்றுக்கொண்டது போன்ற கபட நாடகமாடுகிறது.

ராஜஸ்தானில் உள்ள 199 சட்டமன்ற தொகுதிகளில் 115 தொகுதிகளைக் கைப்பற்றி இருக்கும் பா.ஜ.க., இங்கு முதல்வராக பஜன்லால் சர்மா என்ற உயர் வகுப்பினைச் சேர்ந்தவரையும், துணை முதல்வர்களாக தியா குமாரி என்ற ராஜபுத்ர சமூகத்தைச் சேர்ந்தவரையும், மற்றொரு துணை முதல்வராக பிரேம் சந்தர் பைரவா என்ற தலித் சமூகத்தை சேர்ந்தவரையும் தேர்வு செய்துள்ளது. 1998லிருந்து குவாலியர் ராஜ குடும்பத்தை சேர்ந்தவரும், ராஜஸ்தானின் மருமகளுமான வசுந்தரா ராஜேதான் மீண்டும் மீண்டும் முதல்வராக அமர்த்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, மத்திய பிரதேசத்தில் முதல்வராக மோகன் யாதவ் என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவரையும், துணை முதல்வர்களாக ஜெகதீஷ் தேவ்டா என்ற தலித் சமூகத்தை சேர்ந்தவரையும், மற்றொரு துணை முதல்வர் ராஜேந்திர சுக்லா என்ற உயர் வகுப்பைச் சேர்ந்தவரையும் தேர்வு செய்துள்ளது. இங்கு கடந்த மூன்று முறையாக சிவராஜ் சிங் சவ்கானைத்தான் முதல்வராக அமர்த்தி அழகு பார்த்தது நினைவுகூறத்தக்கது.

இன்னொரு மாநிலமான சத்தீஸ்கரில் உள்ள 90 சட்டமன்ற தொகுதிகளில் 54 இடங்களை வென்று ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க., அங்கு முதல்வராக விஷ்ணு தியோ சாய் என்ற பழங்குடி சமூக பின்னணியைக் கொண்டவரையும், துணை முதல்வர்களாக அருண் சாகு என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவரையும், மற்றொரு துணை முதல்வர் விஜய் சர்மா என்ற உயர் வகுப்பை சேர்ந்தவரையும் தேர்வு செய்துள்ளது.

இப்படி மூன்று மாநிலத்திலும் உயர்வகுப்பு (FC) பிற்படுத்தப்பட்ட வகுப்பு (OBC), தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு (SC&ST) என்று மூன்று பிரிவினருக்கும் அடையாள பிரதிநிதித்துவம் அளித்திருப்பதன் மூலம் தன்னை ஒரு சமூகநீதி கட்சியாக காட்டிக்கொள்ள நினைக்கிறது பா.ஜ.க.

ஆனால், ஏறத்தாழ 40 ஆண்டு கால பா.ஜ.க. அரசியலை புரிந்து கொண்ட அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் மூத்த பத்திரிக்கையாளர்கள் பா.ஜ.க.வின் இந்த கள அரசியல் நடவடிக்கையை, அடுத்து வரும் 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் வெற்றியைக் கருத்திற்கொண்டே சமூகநீதியில் சகுனித்தனம் செய்திருக்கிறது என்று அடித்துக் கூறுகிறார்கள். எப்படியெனில், சத்தீஸ்கரில் பழங்குடி வகுப்பை சேர்ந்த முதல்வரை தேர்ந்தெடுத்திருப்பதன் மூலம் பாரம்பரிய காங்கிரஸ் ஆதரவாளர்களான பழங்குடி மக்களை தங்கள் வசம் ஈர்க்கவும் அண்டை மாநிலமான ஒடிசா ஜார்கண்ட் மாநிலங்களில் பெருவாரியாக வாழும் பழங்குடி மக்களின் வாக்கு வங்கியில் தாக்கத்தை ஏற்படுத்திடும் முயற்சியாகும். இதே போன்று, மத்திய பிரதேசத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மோகன் யாதவ் அங்கு காங்கிரஸ் முகங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, அறியப்படும் கமல் நாத் மற்றும் திக் விஜய் சிங் என்ற முற்படுத்தப்பட்ட சமூக தலைவர்களுக்கு எதிராகவும் காங்கிரசுக்கு சோதனை நகர்வாகவும், கூடவே, யாதவர்கள் அதிகம் வசிக்கும் அண்டை மாநிலங்களான உத்திரபிரதேசம் மற்றும் பீகாரிலும் வாக்கு வங்கியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமையும்.

இதே போன்றுதான் ராஜஸ்தானில் முற்பட்ட வகுப்பை சார்ந்த பஜன்லால் சர்மா தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, ராஜஸ்தானில் மட்டுமல்ல நாடு முழுவதும் பா.ஜ.க.விற்கு அசைக்க முடியாத அடித்தளமாக உள்ள முற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர்களின் ஆதரவை வலுப்படுத்தி நிலைநிறுத்திக் கொள்ளும் உத்தி ஆகும் என்று தக்க தரவுகளுடன் விளக்குகிறார்கள். அதோடு, உண்மையிலேயே சமூக நீதியை உள்வாங்கிக் கொள்ளுமே யானால் பா.ஜ.க. ஆளும் ஏனைய மாநிலங்களிலும் இதே போன்று வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஏன் கொடுக்கவில்லை? ஜாதி வாரி கணக்கெடுப்பு குறித்து தெளிவான முடிவில்லாமல் 'பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும்' என்பது போல் நடந்து கொள்வது ஏன்? நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டு மசோதாவில் அதை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாத அளவில் குழப்பங்களை ஏற்படுத்தி இருப்பது ஏன்? இது போன்ற பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்தெறி யும் ஆணித்தரமான கேள்விகளை முன் வைக்கின்றனர்.

எதற்காக நாம் இதை சுட்டிக்காட்ட வேண்டியது இருக்கிறது என்றால், பா.ஜ.க. செய்கிற அடையாள அரசியல் சித்து வேலைகளை அதன் அடிவருடிகள் ஏதோ பா.ஜ.க. சமூகநீதியை நிலைநிறுத்த புறப்பட்டுவிட்ட சண்டி குதிரை என்பதைப் போல் ஒரு பிம்பத்தைக் கட்டமைக்க துவங்கி இருக்கிறார்கள். பா.ஜ.க.வின் ஏமாற்று வேலைக் குறித்து, 'நான் அவன் இல்லை' என்ற எனது கட்டுரையில் ஏற்கனவே சுட்டிக்காட்டியதைப் போல 1950இல் உயர்ந்த சாதியில் பிறந்த பிரதமர் நரேந்திர மோடியை 1999 இல் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராக மாற்றிய கபட நாடகத்தின் தொடர் அத்தியாயந்தான் இந்த முதல்வர்கள் தேர்வு. தப்பித்தவறி 2024 தேர்தலில் பா.ஜ.க. ஜெயிக்குமேயானால், தனது சனாதன மெய் முகத்தைக் காட்டத் துவங்கிவிடும்

அதன் பிறகு இந்தியாவில் "மாநிலங்களும் இருக்காது. தேர்தலும் நடக்காது...' என்று இந்தியத்துவத்தை நேசிக்கின்ற சமத்துவ சமுதாயத்தை விரும்புகிற அத்தனை பேரும் உறுதியாக சொல்கிறார்கள் எனவே பா.ஜ.க.வின் இந்த அடையாள சமூகநீதி சகுனித்தனத்தை இந்தியாவெங்கும் உரக்கப் பேசி மக்களை விழிப்படையச் செய்து ஜனநாயக இந்தியாவைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு நம்மைப் போன்ற உண்மையான ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் இருக்கிறது.



நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் மூலைக்காடு பகுதியை சார்ந்த சகாய ஜெயபாஸ் பிரஜோப் (வயது 18)என்பவர் கல்வி பயணமாக குவைத்தில் இருந்து அமெரிக்காவிற்கு சென்ற நிலையில் அமெரிக்காவில் இறந்துள்ளார். அன்னாரது உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டது தொடர்ந்து மூலைக்காடு பகுதியில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் முகமது ஷபீர்ஆலம் தலைமையில் அன்னாரது உடலுக்கு அரசு மரியாதை செய்யப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.உடன் ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, வட்டாட்சியர்(பொறுப்பு) பாஸ்கரன் உள்பட பலர் அஞ்சலி செலுத்தினர்.



நெல்லை மாவட்டம் தென் மாவட்டங்களில் உள்ள அணைகள் நிரம்பி வருவதை ஒட்டி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கனவு திட்டமான தாமிரபரணி ஆறு கருமேனியாறு,நம்பியாறு,நதிநீர் இணைப்பு திட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரிநீரை திருநெல்வேலி,தூத்துக்குடி மாவட்டங்களில் வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்கான சோதனை ஓட்டத்தை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளதை தொடர்ந்து வெள்ளங்குளி பகுதியில் நதிநீர் இணைப்பு திட்ட கால்வாயில் வெள்ளோட்ட மாக தண்ணீரை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்.

### கோவையைத் தொடர்ந்து

## சேலம் மாவட்டத்தில் "மக்களுடன் முதல்வர்" திட்ட துவக்க விழா!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!

சேலம், டிச. 19 -

மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவையைத் தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் கார்மேகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், இளைஞர்நலன்மற்றும்விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு திட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை அவர் பெற்றார். இதனையடுத்து 34 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம், மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாற்காலி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

சேலம் மாவட்டத்தில் 142 இடங்களில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் தீர்வு எனக் கூறினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும் எனக் கூறினார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவையடுத்து - கலைஞரின் கனவு திட்டமான

## தாமிரபரணி -கருமேனி - நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டத்தில் சோதனை யோட்டம்!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்!

நெல்லை.டிச.19 -

நெல்லை மாவட்டம் தென் மாவட்டங்களில் உள்ள அணைகள் நிரம்பி வருவதை ஒட்டி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் கனவு திட்டமான தாமிரபரணி கருமேனி ஆறு,நம்பியாறு நதிநீர் இணைப்பு திட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களின் வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்கான சோதனை ஓட்டத்தை மேற்கொள்ள முதல மைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.அதனைத் தொடர்ந்து வெள்ளங்குளி பகுதியில் நதிநீர் இணைப்பு திட்ட கால்வாயில் வெள்ளோட்டமாக தண்ணீரை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் திறந்து வைத்தார்.

இது பற்றிய விவரம் வருமாறு.

தென் மாவட்டங்களில் உள்ள அணைகள் நிரம்பி வருவதை ஒட்டி தாமிரபரணி கருமேனி ஆறு, நம்பியார் நதிநீர் இணைப்பு திட்டத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை திருநெல்வேலி,தூத்துக்குடி மாவட்டங்களில் வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதற்கான சோதனை ஓட்டத்தை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கடந்த 2008 ல் நடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முதல்வர் கலைஞர் அறிவித்தபடி தாமிரபரணி ஆற்றில் இருந்து கடலில் உபரியாக கலக்கும் 13,758 மில்லியன் கனஅடி வெள்ளநீரில் கன்னடியன் (தாமிரபரணி 3வது) அணைக்கட்டில் இருந்து 2765 மில்லியன் கனஅடி நீரை கருமேனி யாறு மற்றும் நம்பியாறுடன் இணைக்கும் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தை 4 நிலைகளாக செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 21022009 அன்று இத்திட்டப் பணிகள் துவக்கி வைக்கப்பட்டன.கடந்த 2 ஆண்டுகளில் பணிகள் விரைவு புடுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டன. தற்போது முதல் 3 நிலைகளுக்கான பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு 4 வது நிலை பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன.

நெல்லை மாவட்டத்தில் 67.1 கிலோமீட்டர் நீளத்திற்கும்,தூத்துக்குடி மாவட்டத்தில் 8.10 கிலோ மீட்டர் நீளத்திற்கும் என மொத்தம் 75.2 கிலோமீட்டர் நீளத்திற்கு வெள்ளநீர் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினால் 17002 ஹெக்டேர் புதிய பாசனப்பரப்பு உள்பட 23,040 ஹெக்டேர் நிலங்கள் (56933 ஏக்கர்) பாசன உறுதி பெறும்.

நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டை, நாங்குநேரி, இராதாபுரம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளும், தூத்துக்குடி மாவட்டத்தில் திருவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய 2 சட்டமன்ற தொகுதிகளிலும் பயன்பேறும். நெல்லை மாவட்டத்தில் 32 கிராமங்கள், 177 குளங்களும்,தூத்துக்குடி மாவட்டத்தில் 18 கிராமங்கள்,75 குளங்களும் பயன்பெறும்.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து இத்திட்டத்தில் உபரி நீரை கொண்டு செல்வது குறித்து நீர்வளத்துறை அமைச்சர் அவர்களிடமும், நீ ர்வளத் துறை அலுவலர்களுடனும் முதலமைச்சர் அவர்கள் கலந்து ஆலோசித்தார்கள்.

இந்த ஆலோசனையின் போது எடுக்கப்பட்ட முடிவின்படி கன்னடியன் வெள்ளப்பெருக்கு கால் வாயில் தண்ணீர் திறக்க ப் பட்டு சோதனை ஓட்டம் மேற்கொள்ள முதல மைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

இந்த ஆணையை தொடர்ந்து நேற்று அம்பா சமுத்திரம் அருகே வெள் ளங்குளி பகுதி வெள்ளநீர் காலவாயில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா பொதுப்பணித் துறை செயற்பொறியாளர்கள் பழனிவேல்,சிவக்குமார்,மாரியப்பன், ஆக்னஸ் ராணி,உதவி செயற்பொறியாளர் வேலானந்தராஜ், ராமகிருஷ்ணன்,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ்,ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி,ராஜன்,

கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணைத்தலைவர் இசக்கிபாண்டியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாலமோன் டேவிட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு உபரிநீர் திறக்கப்பட்டு திருநெல்வேலி ,தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளில் வாழும் விவசாயிகளின் நூற்றாண்டு கனவான இத்திட்டம் செயல்பட்டு கொண்டு வரப்பட்டுள்ள தால் வேளாண் பெருமக்கள் பெரு மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி அல்லிநகரம் நகராட்சிசார்பில் நடைபெற்ற மக்களின் முதல்வர் திட்ட முகாமை வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், சரவணகுமார் எம்.எல்.ஏ. ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் தேனி நகர மன்றத் தலைவர் ரேணு பிரியா பாலமுருகன், நகரச் செயலாளர் நாராயண பாண்டியன், மாவட்ட அயலாக்க அமைப்பாளர் ராஜன், முன்னாள் நகரச் செயலாளர் பாலமுருகன், கவுன்சிலர் நாகராணி மற்றும் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் நகராட்சிசார்பில் நடைபெற்ற மக்களிடம் முதல்வர் திட்டத்தின் திட்டத்தை சரவணகுமார் எம்.எல்.ஏ., துவக்கி வைத்தனர். உடன் பெரியகுளம் நகர மன்ற தலைவர் சுமிதா சிவகுமார், நகர செயலாளமுகமது இலியாஸ்' பெரியகுளம் ஊராட்சி ஒன்றியதலைவர் தங்கவேல் மற்றும் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.